

29.10.2026 செய்திகள்

திருநர் உரிமைகளைத் தமிழகம் காக்கட்டும்!

» திருத்தமும் அதிகாரமும்

- திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 இல் இந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட திருத்தம் மூன்று முக்கிய மாற்றங்களைச் செய்துள்ளது.
- முதலாவதாக, திருநர் என்பதற்கான சட்ட வரையறை குறுகியதாக மாற்றப்பட்டுச் சில குறிப்பிட்ட சமூக-பண்பாட்டு அடையாளங்களுக்குள் சுருக்கப்பட்டுள்ளது.
- இரண்டாவதாக, திருநர் என்கிற அடையாளச் சான்றிதழையோ பெறுவதற்கான நடைமுறை மருத்துவப் பரிசோதனைகளை அதிகம் சார்ந்ததாக மாற்றப்பட்டுள்ளது.
- மூன்றாவதாக, புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள சில குற்றப் பிரிவுகள் தெளிவற்றும் மிக விரிவாகவும் இருப்பதால், ஜமாஅத் அமைப்புகள் (திருநர் சமூகத்தினர் தங்களுக்கு இடையே நடத்தும் பொதுவான அமைப்பு), ஹிஜ்ரா கரானாக்கள் (திருநர் சமூகம் தங்கும் இடம்), திருநர், பால்புதுமையர் மக்களுக்கு ஆதரவளிக்கும் தொண்டு நிறுவனங்கள் போன்றவற்றின் செயல்பாடுகள்கூடக் குற்றமாக்கப்படும் அபாயம் உள்ளது.
- ஆனால், இந்தத் திருத்தத்துக்குப் பிறகும் மாநில அரசுகளுக்கு முக்கியமான அதிகாரங்கள் உள்ளன. திருநர்கள் (உரிமைகள் பாதுகாப்பு) சட்டம், 2019 இன் பிரிவு 22, சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான விதிகளை உருவாக்க மாநில அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது.
- மேலும், 'நால்ஸா (NALSA) எதிர் இந்திய ஒன்றியம்' வழக்கில் உச்சநீதிமன்றம் அங்கீகரித்த சுயபாலின அடையாளம், கண்ணியம், சமத்துவம் போன்ற அடிப்படை உரிமைகளும் தொடர்ந்து பொருந்துகின்றன.

» தெளிவு அவசியம்

- இந்த இரண்டையும் அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு அரசு குறைந்தபட்சம் சில நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க முடியும். 2026 திருத்தச் சட்டம் திருநங்கை என்பதற்கான வரையறையைச் சுருக்கி அதற்குள் சில குறிப்பிட்ட சமூகப் பிரிவுகளை மட்டுமே குறிப்பிடுகிறது.
- அவற்றில் அரவாணி என்பதும் ஒன்று. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இந்தச் சொல்லுக்கு குறுகிய பொருள் அளிக்கக்கூடாது.
- அரவாணி என்கிற சொல் திருநங்கைகள், திருநம்பிகள் உள்ளிட்ட தமிழ்நாட்டில் நிலவும் பல்வேறு திருநர் அடையாளங்களையும் உள்ளடக்கும் வகையில் மாநில அரசு தெளிவுபடுத்த வேண்டும். ஏற்கெனவே சட்டபூர்வமாகப் பாலின அடையாளத்தை மாற்றியவர்களை மீண்டும் புதிய நடைமுறைக்கு உட்படுத்தக்கூடாது.

இந்திய விமானி மச்சாருக்கு எமிரேட்சின் உயரிய விருது

- மேற்காசிய நாடான ஐக்கிய அரபு எமிரேட்சின் துபாயில் இருந்து இஸ்ரேல் தலைநகர் டெல் அவிவ் நோக்கி கடந்த செப்.30ல் 'ப்ளை துபாய்' விமானம் புறப்பட்டு சென்றது.
- விமானிகள், பிபந்திகள் பயணியர் என 170க்கும் மேற்பட்டோர் அதில் பயணித்தனர்.
- விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில், ஓமன் நாட்டை சேர்ந்த துணை விமானி, கேப்டன் ஸ்மிட் மச்சாரின் பின்மண்டையில் தாக்கி, விமானத்தை கடத்த முயன்றார்.
- அவருடன் போராடிய ஸ்மிட் மச்சார், பயணியர் உதவியுடன் அந்த சதிதிட்டத்தை முறியடித்தார்.
- இந்திய விமானி மச்சாரின் வீரதீர செயலால் 170க்கும் மேற்பட்டோர் உயிர் தப்பினர்.
- 'பர்ஸ்ட் கிளாஸ் ஆர்டர் ஆப் சையத் 2' என்ற உயரிய வீரதீர விருதை வழங்கி கவுரவித்தனர்.

- ஏற்கெனவே திருநங்கை அடையாள அட்டை பெற்றவர்கள் அல்லது தங்களது ஆவணங்களில் பாலினத்தை ஆண் அல்லது பெண் என்று சட்டப்பூர்வமாக மாற்றியவர்கள் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்வி எழுகிறது.
- இவர்கள் மீண்டும் புதிய மருத்துவ நடைமுறைக்குத் தள்ளப்படக்கூடாது. 2019 சட்டத்தின் பிரிவு 22 இன் கீழ், மாநிலத்துக்கு உள்ள விதி வகுக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி, ஏற்கெனவே வழங்கப்பட்ட அடையாளச் சான்றிதழ்கள், சட்டப்பூர்வப் பாலின மாற்றங்கள் தொடர்ந்து செல்லுபடியாகும் என்பதைத் தமிழ்நாடு அரசு தெளிவுபடுத்த வேண்டும்.

» புகலிடத்துக்கு ஆபத்து

- 2026 திருத்தத்தில் சேர்க்கப்பட்டுள்ள சில குற்றப்பிரிவுகள் மற்றொரு முக்கியமான அபாயத்தை உருவாக்குகின்றன. வன்முறை அல்லது குடும்பத் துன்புறுத்தலில் இருந்து வெளியேறும் திருநர் இளைஞர்களுக்கு ஜமாஅத் அமைப்புகள், ஹிஜ்ரா கரானாக்கள், பால்பதுமையர் – திருநர் உரிமை அமைப்புகள் பல நேரங்களில் தங்குமிடம், பாதுகாப்பு, சமூக ஆதரவை வழங்குகின்றன.
- குறிப்பாக, குடும்பத்தின் எதிர்ப்பை மீறித் தனது பாலின அடையாளத்தின்படி வாழ விரும்பும் ஒருவருக்கு இத்தகைய சமூக அமைப்புகளே முதலில் பாதுகாப்பு அளிக்கக்கூடும்.
- புதிய குற்றப்பிரிவுகள் மிக விரிவாகப் பயன்படுத்தப்பட்டால், தன்னிச்சையாக வீட்டைவிட்டு வெளியேறிய ஒருவருக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் மீதே கடத்தல் அல்லது கட்டாயப்படுத்துதல் போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்படும் அபாயம் உள்ளது.
- இதைத் தவிர்க்க, காவல்துறைக்கு தமிழ்நாடு உள்துறை தெளிவான வழிகாட்டுதல்களை வழங்க வேண்டும்.
- முதல்கட்ட விசாரணையில், சம்பந்தப்பட்ட திருநர் தனது சொந்த விருப்பத்தின் பேரில் வீட்டை விட்டு வெளியேறியுள்ளார், அடைக்கலம் நாடியுள்ளார் அல்லது தனது விருப்பத்தின்பேரில் பாலின மாற்றப் பயணத்தை மேற்கொள்கிறார் என்பது தெரியவந்தால், அவர் மீதும் அவருக்கு உதவிய ஜமாஅத், கரானா அல்லது தொண்டு நிறுவனத்தின் மீதும் குற்றவியல் நடவடிக்கை தொடங்கக் கூடாது.
- சம்பந்தப்பட்டவர் சிறாராக இருந்தால், குழந்தைகளுக்கென உள்ள பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். சிறார் நீதி (குழந்தைகளின் பாராமரிப்பு – பாதுகாப்பு) சட்டம், 2015 இன் கீழ் உரிய குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் முதல்கட்ட விசாரணையை மேற்கொள்ள வேண்டும்.
- குழந்தைக்கு உண்மையில் வன்முறை, சுரண்டல் அல்லது துன்புறுத்தல் ஏற்படும் அபாயம் இருப்பதாகத் தெரியவந்தால் மட்டுமே, சட்டத்தில் வகுக்கப்பட்டுள்ள நடைமுறையின்படி குழந்தைகள் நலக் குழுவின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

» பாலின அடையாளம்

- 2026 திருத்தத்துக்குப் பிறகு எழுந்துள்ள மற்றோர் அச்சம், பாலினத்தை உறுதிப்படுத்தும் மருத்துவ சேவைகள் பாதிக்கப்படுமா என்பது இந்த விஷயத்தில் சட்ட நிலை தெளிவாக உள்ளது.
- பாலினத்தை உறுதிப்படுத்தும் முறையான மருத்துவச் சேவைகளை வழங்குவதைத் தடை செய்யவோ குற்றமாக்கவோ 2026 திருத்தச் சட்டத்தில் எந்தப் பிரிவும் இல்லை.
- 2026 ஏப்ரல் 1 அன்று மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா எழுப்பிய கேள்விக்கு அளித்த பதிலில், மத்திய சமூக நீதி – அதிகாரமளித்தல் அமைச்சகமும் இதைத் தெளிவுபடுத்தியுள்ளது.
- திருத்தச் சட்டத்தின் குற்றவியல் பிரிவுகள் முறையான பாலினத்தை உறுதிப்படுத்தும் மருத்துவ சேவைகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் கொண்டுவரப்படவில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. எனவே, தமிழ்நாட்டில் உள்ள மருத்துவமனைகள், மருத்துவர்கள், உளவியல் நிபுணர்கள், பிற சுகாதாரப் பணியாளர்கள் இச்சேவைகளை எந்தத் தயக்கமும் இன்றித் தொடர்ந்து வழங்க வேண்டும்.
- இது குறித்து தமிழ்நாடு அரசு தனியாக ஓர் அரசாணை அல்லது தெளிவான வழிகாட்டுதலை வெளியிடலாம். அரசு மருத்துவமனைகளில் தற்போது இலவசமாக வழங்கப்படும் – பாலினத்தை உறுதிப்படுத்தும் அறுவை சிகிச்சைகள் உள்ளிட்ட சேவைகள் எந்தக் காரணத்துக்காகவும் நிறுத்தப்படக்கூடாது.
- புதிய சட்டம் குறித்த தவறான புரிதலால் திருநர் ஒருவருக்கு சிகிச்சை மறுக்கப்படாத வகையில், மருத்துவப் பணியாளர்களுக்கான விழிப்புணர்வும் பயிற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.